பக்கங்கள் 17 + 04

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 19 திங்கட்கிழமை 01.04.2024 அதிர்வு 245

## லிட்ரோ எரிவாயு விலை குறைப்பு



இன்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்

04 ▶



### துமிந்த, அழகியவண்ண, அமரவீர

# சுதந்திரக் கட்சியின் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டமைக்கு இடைக்காலத் தடை

### மைத்திரியின் தீர்மானத்துக்கு ஆப்பு



**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதவிகளில் இருந்து மஹிந்த அமரவீர, துமிந்த திஸாநாயக்க மற்றும் லசந்த அழகியவண்ண ஆகியோரை நீக்குவதற்கு எதிராகக் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இன்று இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது.**

**அவர்கள் நீதிமன்றில் முன்வைத்துள்ள கோரிக்கையைப் பரிசீலித்த பின்னரே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

அதன்படி, நீக்கப்பட்ட அனைவரும் மீண்டும் பணியில் அமர்த்தப்படவுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதவிகளில் இருந்து மஹிந்த அமரவீர, துமிந்த திஸாநாயக்க மற்றும் லசந்த அழகியவண்ண ஆகியோர் கடந்த சனிக்கிழமை நீக்கப்பட்டிருந்தனர்.

### முதலில் ஜனாதிபதித் தேர்தல்

# பொதுவேட்பாளராகக் களமிறங்குவார் ரணில்

### கொழும்பு அரசியல் உயர்மட்டங்கள் தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெறும் எனவும், அதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது வேட்பாளராகவே களமிறங்குவார் என்றும் கொழும்பு அரசியல் உயர்மட்டங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதித் தேர்தலா? பொதுத் தேர்தலா? முதலில் இடம்பெறும் என்ற குழப்பம் உருவாகியுள்ள சூழலில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாக ஜனாதிபதித் தேர்தலையே முதலில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளார். அதற்குரிய ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறும் பணித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு ஜூலை மாதமளவில் இலங்கைக்கு

04 ▶




# கிழக்கு மாகாண ஆளுநர் காரியாலயத்துக்கு முன்பாக பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் ஆர்ப்பாட்டம்

(எச்.எம். ஹலால் தீன் )

பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்தால் கிழக்கு மாகாண ஆளுநர் காரியாலயத்துக்கு முன்பாக இன்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரிய சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இடம்பெற்றது.

திருகோணமலை அபயபுர சந்திக்கு முன்னால் ஆரம்பித்த ஆர்ப்பாட்டப் பேரணி அங்கிருந்து கிழக்கு மாகாண ஆளுநர் காரியாலயத்துக்கு முன்னால் வந்தடைந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் ஆளுநரிடம் கையளித்தனர்.



# யாழில் ஆலயத்தில் தேங்காய் உடைத்து விட்டு திரும்பிய முதியவர் மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு



ஆலயத்தில் தேங்காய் உடைத்து விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த முதியவர் ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து சாவடைந்தார்.

யாழ்ப்பாணம் – சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி அர்ஜீனன் என்ற 68 வயதானவரே உயிரிழந்தார்.

வீட்டுக்கு அருகில் உள்ள ஆலய மொன்றுக்குச் சென்று வழிபட்ட பின்னர் தேங்காய் உடைத்து விட்டு வீடு திரும்பிய முதியவர் இயலாத நிலையில் வரம் பொன்றில் அமர்ந்தபோது மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

சம்பவ இடத்தில் இருந்து சடலம் மீட்கப்பட்டு உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப் பட்டது.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர்.



# 75 அடி பள்ளத்தில் வீழ்ந்தது ஜீப்! பத்து பேர் வைத்தியசாலையில்!!

பண்டாரவளையில் இருந்து ரம்புக்கனை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த ஜீப் வாகனம் ஒன்று கம்பளை, தெல்பிட்டிய பகுதியில் வைத்து 75 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 10 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த ஜீப் வாகனத்தில் 15 பேர் பயணித்துள்ளனர். மரண வீடொன்றுக்குத் திரும்பிய குழுவினரின் பயணித்த ஜீப் வாகனமே இன்று அதிகாலை 4 மணியளவில் இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கமே விபத்துக்குக் காரணம் எனத் தெரியவருகின்றது.



# நுவரெலியாவில் வசந்தகாலக் கொண்டாட்டம் ஆரம்பம்

ஒவ்வொரு வருடமும் நுவரெலியாவில் ஏப்ரல் மாதத்தில் நடத்தப்படும் வசந்த கால நிகழ்வுகள் 2024ஆம் ஆண்டுக்கானது இன்று காலை நுவரெலியா – பதுளை பிரதான வீதியில் நுவரெலியா மத்திய சந்தைக்கு முன்பாக மிகவும் கோலாகாலமாக ஆரம்பித்துவைக்கப்பட்டன.

வழக்கம் போல் நுவரெலியா நகரில் உள்ள பாடசாலை மாணவர்களின் பேண்ட் வாத்திய இசை நிகழ்ச்சியுடன் இந்த வசந்த கால நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நுவரெலியா மாநகர சபை ஏற்பாட்டில் நுவரெலியா மாநகர சபை விசேட ஆணையாளர் திருமதி சுஜீவ போதிமான தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் இம் மாதம் முழுவதும் பல்வேறு பாரம்பரிய நிகழ்வுகள் போட்டிகள் என்பன ஏற்பாடாகியுள்ளன.

ஆரம்ப நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யு. கமகே பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதோடு நுவரெலியா மாவட்ட அரச அதிபர் நந்தன கலகொட , பிரதேச செயலாளர், உதவி செயலாளர், பொலிஸ் அத்தியட்சகர்கள், முன்னாள் மாநகர சபை முதல்வர் மஹிந்த தொடபேகம மற்றும் சந்தணலால் கருணாரத்ன, நுவரெலியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் , இராணுவ அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், விமானப்படை அதிகாரிகள், சுகாதார மற்றும் மாநகர சபை உறுப்பினர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

இன்று ஆரம்பிக்கும் நிகழ்வுகள் இம்மாதம் 30 ஆம் திகதி வரை வசந்த காலக் கொண்டாட்டங்கள் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து வரும் நாட்களில் மலர் கண்காட்சி, படகோட்டம், கார் பந்தய ஓட்டப் போட்டி, குதிரைப்பந்தயம், கிரிக்கெட் சுற்றுப் போட்டி, உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி, கிறகரி வாவியில் நீர் விளையாட்டு, சேற்றில் மோட்டார் ஓட்டம், மோட்டார் சைக்கிள் தடைதாண்டல் போட்டி மற்றும் நாள்தோறும் இசை நிகழ்ச்சிகள் என களியாட்ட விழாக்களும் இந்த வசந்த கால விழாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது .

# வடக்கு சுகாதாரப் பணிப்பாளராக சிங்களவர் ஒருவர் நியமனம்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண சுகாதாரப் பணிப் பாளராக உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் வைத்திய கலாநிதி பத்திரன சுகாதார அமைச்சால் நியமிக்கப் பட்டுள்ளார்.

சுகாதார அமைச்சால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வின் அடிப் படையில் இந்த நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

இதேநேரம் வைத்திய கலாநிதிக ளான சுகாஸ்கரன் வவுனியா மாவட்டத் துக்கான பிராந்தி சுகாதாரப் பணிப்பா ளராகவும், உமாசங்கர் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான பிராந்தி சுகாதாரப் பணிப்பாளராகவும், விக்கிரமசிங்க மன்னார் மாவட்டத்துக்கான பிராந்தி சுகாதாரப் பணிப்பாளராகவும், வினோ தன் கிளிநொச்சி மாவட்டத்துக்கான பிராந்தி சுகாதாரப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரம் வவுனியா மாவட்ட வைத் தியசாலைப் பணிப்பாளராக வைத்தியர் சுகுணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

# வவுனியா சிறைக் கைதி மாரடைப்பால் உயிரிழப்பு

(கே.வசந்தன்)

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் வவு னியா வைத்தியசாலையில் நேற்று மாலை மரணமடைந்துள்ளார்.

குற்றச் செயல் ஒன்று தொடர்பில் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டதையடுத்து சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் மேற்படி கைதிக்கு சிகிச்சை வழங்கப்பட்ட போதும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

மாரடைப்பு காரணமாகவே மரணம் இடம்பெற்றுள்ளது என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். ஜா – எல பகுதியைச் சேர்ந்த 34 வயது இளைஞரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவு னியா பொலசாஸார் மேலதிக விசார ணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# யாழ். கடலில் மாயமான இளைஞர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம் – கொழும்புத்துறை கடற்கரையில் இளைஞர் ஒருவர் இன்று மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு – பெரியகல்லாறு, ஓடக்கரையைச் சேர்ந்த 19 வயதான ரவீந்திரன் யதுசன் என்பவரே உயிரி ழந்தார்.

நேற்று மாலை மட்டி எடுப்பதற்குக் கடலுக்குள் சென்றவர் காணாமல்போன நிலையில் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# லாஃப்ஸ் எரிவாயு விலையும் குறைப்பு

லாஃப்ஸ் எரிவாயு நிறுவனமும் சமையல் எரிவாயு விலையை குறைக்கத் தீர்மானித்துள்ளது.

லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம் இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை குறைப்பானது இன்று நள்ளிரவு முதல் அமுலாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 12.5 கிலோ கிராம் எடை கொண்ட சமையல் எரிவாயுவின்



விலையை 625 ரூபாவால் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இன்று நள்ளிரவு முதல் 12.5 கிலோ கிராம் எடைக்கொண்ட சமையல் எரிவாயுவின் புதிய விலை 4 ஆயிரத்து 115 ரூபாவாக நிர்ணயிக் கப்பட்டுள்ளது.

அத்துடன், 5 கிலோ கிராம் எடைக் கொண்ட சமையல் எரிவாயுவின் விலையை 248 ரூபாவால் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இன்று நள்ளிரவு முதல் 5 கிலோ கிராம் எடை கொண்ட சமையல் எரிவாயுவின் விலை 1,652 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**லிட்ரோ....**

டுள்ளது என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

கொழும்பில் இன்று முற்பகல் நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அதன் தலைவர் முதித்த பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரி வாயுவின் விலை 135 ரூபாவால் குறைக் கப்பட்டுள்ளது. இதன்படி அதன் புதிய விலை 4,115 ரூபாவாக நிர்ணயிக் கப்பட்டுள்ளது.

அதேநேரம், 5 கிலோகிராம் நிறையு டைய லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன் விலை 55 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 1,652 ரூபாவாகும்.

2.3 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 23 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 772 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**பொதுவேட்பாளராகக்....**

கிடைக்கும் என்று எதிர்பார்க்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்தக் கொடுப்பனவு கிடைத்த கையோடு நிவாரணங்களை வழங்கி ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள விரும்புகின்றார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங் கள் சுட்டிக்காட்டின.

செப்டெம்பர் 18ஆம் திகதிக்கும் ஒக் ரோபர் 18ஆம் திகதிக்கும் இடையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலையில் செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதியை அண்மித்த தினத்தில் தேர்தலை நடத்தவே ஜனாதிபதி ரணில் விரும்புவதாகவும் அந்த வட்டாரங் கள் மேலும் தெரிவித்தன.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட மாட்டார் என வும், பொதுவேட்பாளராகவே களமிறங் குவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.





# இந்திய உயர்தர மிளகாய் விதைகள் உற்பத்தியாளர்களுக்கு விநியோகம்!

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மீள்குடியேறி வாழும் பிச்சைவாணிப நெடுங்குளம் அலக்கட்டு , வேப்பங்குளம் அலக்கட்டு, அகத்தி முறிப்பு அலக்கட்டு மற்றும் பொற்கேணி அலக்கட்டு ஆகிய நான்கு கிராமங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 250 மிளகாய் செய்கை உற்பத்தியாளர்களுக்கு இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட உயர்தர வர்க்கம் கொண்ட மிளகாய் விதைகள் வழங்கப்பட்டன.

முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியுதீன் ஏற்பாட்டில் பாலாஜி வெண்சலஸ் லங்கா பிரைவேட் லிமிடெட் தனியார் நிறுவனத்தால் இவ்விதைகள் பிச்சைவாணிப பகுதி பாடசாலை வளாக முன்றலில் வைத்து ஞாயிற்றுக்கிழமை (31) வழங்கப்பட்டன.

முசலி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எச்.எம்.உவைஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ரிசாட் பதியுதீன் , இந்த நிறுவனத்தின் உரிமையாளர் கணேஷ் அகுஜா , இந்திய நாட்டின் மும்பாய் பகுதியைச் சார்ந்த கே.பி. மஞ்சு , மதுரையைச் சேர்ந்த முத்து வேலாயுதம் மற்றும் முன்னாள் மன்னார் பிரதேச சபை தவிசாளர் முஜாகீர் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.



# இலவச கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்

( அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை குச்சவெளி பிரதேசத்தில் லயன்ஸ்கழகத்தால் இலவச கண் பரிசோதனையும் மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வும் நடத்தப்பட்டன.

கண்பார்வை குறைந்த மக்களின் நலன் கருதி பார்வையைக் கொடுப்போம் என்ற நோக்குடன் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் ஊடாக 200 இற்கும் மேற்பட்டவர்களுக்கு இலவசமாக கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இலவச மூக்குக் கண்ணாடியும் வழங்கப்பட்டது.

புல்மோட்டை, குச்சவெளி, இரணைக்கேணி, திரியாய் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு இலவச மூக்கு கண்ணாடிகளை பெற்றுக் கொண்டனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கப்பல் விபத்தால் அதிர்ச்சி

அமெரிக்காவின் பால்ட்டிமோர் பாலத்தில் கடந்த 26 ஆம் திகதி விபத்துக்குள்ளான கப்பல் விவகாரம் இலங்கையில் புதிய அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

மேர்க்ஸ் நிறுவனத்தினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட சிங்கப்பூர் நாட்டின் டாலி என்ற இந்தக் கப்பலில் விபத்து சமயம் 4,700 கொள்கலன்கள் இருந்துள்ளன.

கடைசியாக அமெரிக்காவின் வேர்ஜீனியா துறைமுகத்திலிருந்து புறப்பட்ட இந்தக் கப்பல் தென்னாபிரிக்காவைச் சுற்றிக்கொண்டு 27 நாள் பயணத்தின் பின்னர் இலங்கையில் புது வருடம் முடிந்த சமயத்தில் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைய இருந்தது. அதுதான் அக்கப்பலின் பயண மார்க்கத் திட்டம். வழியில் கடந்த 26 ஆம் திகதி பால்ட்டிமோர் பாலத்தில் அக்கப்பல் விபத்தில் சிக்கியமையால் இப்போது புதிய சர்ச்சைகள் கிளம்பியிருக்கின்றன.

இந்தக் கப்பலில் கொழும்பில் இறக்கப்பட வேண்டிய 56 கொள்கலன்கள் இருந்துள்ளன. அவற்றில் 'வகுப்பு - 9' பிரிவைச் சேர்ந்த 764 தொன் அபாயகரமான பொருள்கள் - கழிவுகள் - இருக்கின்றன என்று அமெரிக்க தேசிய போக்குவரத்துப் பாதுகாப்பு வாரியத்தை மேற்கோள்காட்டி வெளியான செய்திகள் இப்போது இலங்கையில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி இருக்கின்றன.

அந்தக் கப்பலின் எஞ்சிய 4,644 கொள்கலன்களில் என்ன பொருள்கள் உள்ளன என்றவிவரம்இன்னும்வெளியாகவில்லை.

கப்பல் மற்றும் சரக்குப் போக்குவரத்துத் தொடர்பான விடயங்களில் அபாயகரமான - ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய - பொருள்கள் தொடர்பில் அவற்றின் வகையறாக்களை வரிசைப்படுத்தி முறைப்படுத்தும் ஒரு வரைமுறை உண்டு.

'வகுப்பு -1' இல் வெடிப்பொருள்கள் அடங்குகின்றன. அவற்றின் வெடிப்புத் தன்மை, ஏற்படுத்தக்கூடிய அழிவு, கழிவுப் பாதிப்பு போன்றவற்றின் அடிப்படையில் அவை 'வகுப்பு - 1' இன் உப பிரிவுகளிலும் வகைப்படுத்தப்படுகின்றன.

இதே போல எரியக்கூடிய வாயுக்கள் 'வகுப்பு - 2' இலும், எரியக்கூடிய திரவப் பொருள்கள் 'வகுப்பு - 3' இலும் வகைப்படுத்தப்படுகின்றன.

அதேபோன்று எரியக்கூடிய திடப் பொருள்கள், தன்னிச்சையாக எரியக் கூடியவை, தண்ணீருடன் தொடர்புபடும் போது எரியக்கூடியவை, எரியக்கூடிய வாயுக்களை வெளிப்படுத்துவதை என்பன 'வகுப்பு - 4' இல் அடங்குகின்றன.

இந்த வரிசையில் 'வகுப்பு - 9'ஐச் சேர்ந்த அபாயகரமான கழிவு பொருள்கள் இலங்கைக்கு என அனுப்பப்பட்ட கொள்கலன்களில் இருக்கின்றன என்று அமெரிக்காவிலிருந்து தகவல் வெளியாகி உள்ளது.

இலங்கைக்கு முகவரி இடப்பட்ட கொள்கலன்களில் அரிக்கும் பொருள்கள், எரியக்கூடிய பொருள்கள், இதர அபாயகரமான பொருள்கள், லித்தியம் அயன் பட்டரிகள் உட்பட 'வகுப்பு - 9' ரகத்தில் அடங்கும் அபாயகரமான பொருள்கள் இருந்துள்ளன என்று தற்போது செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

இந்தப் பொருள்களின் முழு விவரம், அவற்றை இலங்கையில் பெற இருந்த தரப்புகள், அவற்றை இலங்கைக்குத் தருவிப்பதற்கான நோக்கம் போன்றவை ஊன்றி ஆராயப்பட்ட பின்னர்தான் இதில் ஏதேனும் முறைகேடுகள், குழப்பங்கள், ஆபத்துக்கள், பாதிப்புகள் உள்ளனவா என்ற முடிவுக்கு வர முடியும்.

அந்தக் கப்பலில் ஆபத்து தரக்கூடிய - அபாயத்தை ஏற்படுத்தக்கூடிய - வகைகளைச் சேர்ந்த பொருள்கள் இருந்தன என்ற வகைப்படுத்தலை மட்டும் வைத்து ஏதோ பெரிய முறைகேடு இடம்பெறுவதாகப் புலம்புவது அர்த்தமற்றது.

தீப்பெட்டியை வைத்து விளக்கையும் ஏற்றலாம். வீட்டையும் கொளுத்தலாம். நோக்கத்தைப் பொறுத்தது செயலின் தன்மை.

மேற்படி கப்பல் மூலம் இலங்கைக்கு எடுத்து வரப்பட்ட பொருள்கள் குறித்து முழுமையான ஆய்வு - விசாரணை - முடியாமல் அது குறித்து அவசரப்பட்டு முடிவு செய்வது பொருத்தமானது அல்ல. அதே சமயம் இந்த விடயம் குறித்து விரிவான - ஆழமான - நேர்மையான - விசாரணை நடத்தப்படாமல் அது மூடி மறைக்கப்படுவதற்கும் இடம் அளிக்கப்படக் கூடாது.



# திருமலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

திருகோணமலை, நாமல்வத்த நல்லகுட்டியாறு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவருக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

CARE STATION தொண்டார்வ அமைப்பினூடாக நேற்று (31) 90 மாணவர்களுக்கு இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினருடன் CARE STATION ஒருங்கிணைப்பாளர்களான முகம்மட் அஸ்வர், முகமட் அப்ரின் மற்றும் முகம்மட் அஸ்மிர் ஆகியோர் பங்கேற்றனர்.




பாடசாலை அடிப்படையிலான சமூகத்தின் அனைத்துத் தரப்பினருடைய பங்கேற்புடன் கல்வி அபிவிருத்திச் செயற்பாடு என்ற செயற்றிட்டத்தின் கீழ் திருகோணமலை வடக்கு வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வறுமையில் வாழ்ந்துவரும் மாணவர்களுக்குத் தலா 5000 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் அடங்கிய புத்தகப் பைகள் வழங்கப்பட்டு வருகின்றன.எதிர்காலத்தில் கல்வியை மேம்படுத்தும் விதத்திலேயே இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிண்ணியா கரையோர அபிவிருத்தி பணிகள் தொடர்பில் ஆராய்வு!

**(எச்.எம் ஹலால்தீன்)**

கிண்ணியா கரையோர அபிவிருத்தி பணிகள் தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநருடன் இணைந்து தௌபீக் எம்.பி. ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கிண்ணியா உப்பாறு தொடக்கம் கங்கை வரையிலான கரையோரப் பகுதியில் கரையோர நடைபாதை அமைப்பதற்கும் அதனுடன் இணைந்து அந்தப் பிரதேச சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேள்கொண்டு வருகிறார்.

இது தொடர்பில் ஆராய்வதற்கு கிழக்கு ஆளுநர் மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் உள்ளிட்ட குழுவினர் ஞாயிற்றுக்கிழமை (31) அந்தப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்தனர்.

இதன்போது இந்தத் திட்டம் தொடர்பாக முழுமையாக ஆராயப்பட்டது. விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.



இந்த நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மது கனி, திட்டமிடல் பணிப்பாளர் பாயிஸ், காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் கிழக்கு மாகாண பணிப்பாளர் விமல்ராஜ், காணி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.



# இளைஞர்களால் முற்றுகை செய்யப்பட்ட சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையம்

## இருவர் பொலிஸாரால் கைது

**(மன்னார்)**

மன்னார் – மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள காயநகர் கிராம சேவையாளர் பிரிவு ஈச்சளவக்கை கிராமத்தின் காட்டுப் பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் பொலிஸ்மா அதிபரின் சிந்தனைக்கு அமைய ஈச்சளவக்கை கிராமத்தின் மருதம் விளையாட்டு கழகம் அதிரடியான முடிவை எடுத்து கழகத்தின் ஆறு பேர் மற்றும் ஊடகவியலாளர் ஒருவருவரும் இணைந்து நேற்று (31) ஞாயிற்றுக் கிழமை மாலை அந்தப் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யும் குளத்தின் வாய்க்கால் பகுதியில் இறங்கி தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன் போது கசிப்பு உற்பத்தியாளர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர். கசிப்பு பரல் இரவாகியும் அவ்விடத்தில் இருந்த நிலையில் குறித்த குழுவினரால் மீட்கப் பட்டு அடம்பன் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டது.

அவ்விடத்தில் கசிப்பு உற்பத்தி வேலையில் ஈடுபடும் இருவர், தாம் தொடர்ந்து சட்டவிரோத மது உற்பத் தியை முன்னெடுக்க உள்ளனர் எனவும் பிடிக்க முடிந்தால் பிடித்து பார்க்கட்டும் எனவும் எச்சரித்தனர்.

இதனை அவதானித்த பொலிஸார் அவர்கள் இருவரையும் கைது செய்த னர்.



# பாரதிபுரம் செபஸ்ரியார் வீதியின் பாலம் புனரமைப்பு ஆரம்ப நிகழ்வு



கிளிநொச்சி, பாரதிபுரம் செபஸ்ரியார் வீதியின் பாலம் புனரமைப்புச் செய்யப் படவுள் ளது.

கிராமிய வீதிகள் இரா ஜாங்க அமைச்சரும் மட்டக்க ளப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சி. சந் திரகாந்தனின் கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக் கீட்டின் கீழ் விவசாயம், மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை மூலம் நாட்டின் பொரு ளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யக் கூடிய வீதிகள் மற்றும் கிராமிய பாலங்கள் செப்பனிடப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டு வரு கிறது.

இந்த நிலையில், 15.3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிளிநொச்சி மாவட்ட பாரதிபுரம் செபஸ்ரியார் வீதியில் உள்ள உடைந்த பாலம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதற்கான வேலைகளை இராஜாங்க அமைச்சர் சி. சந்திரகாந்தன் உத்தி யோக பூர்வமாக ஆரம்பித்து வைத்துள் ளார்.

பாரதிபுரத்துக்குச் செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள இந்தப் பாலமானது சுமார் நான்கு வருடங்க ளுக்கு மேலாக உடைந்து – போக்கு வரத்து தடைப்பட்டுக் காணப்படுகிறது.

பாடசாலை மாணவர்கள், பொது மக்கள், அரச சேவைகளுக்கு செல்லும் அதிகாரிகள் என பலரும் பல சிரமங் களை இதனால் எதிர்கொண்டு வரு கின்றனர்.

இந்த ஆரம்ப நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், அமைச்சின் மேலதி செய லாளர் ரணவீர, வீதி அபிவி ருத்தி அதி கார சபையின் மேலதிக பணிப்பாளர் நாய கம் (மனித வளம்) சூரிய குமார், மாகாண பணிப்பாளர் குரூஸ், கிளி நொச்சி மாவட்ட பிரதான பொறியிய லாளர் அரந்தன், யாழ் . மாவட்ட பிர தான பொறியியலாளர் இளங்கீரன், நிறைவேற்றி பொறியிய லாளர் நித்தி யானந்தன், கட்சியின் பொதுச் செய லாளர் பூ. பிரசாந்தன், பிரம பொருளாளர் ஆ.தேவராசா, கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரின் இணைப்பாளர், எமது அமைச்சின் அதிகாரிகள், பிரதேச செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் உட்பட உத்தியோகத் தர்கள், ஒப்பந்ததாரர்கள், கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




# சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிலை சிட்னியில் திறந்து வைப்பு!

சங்கத்தமிழ் பாடிய சிங்கத்தமிழன் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலை ஆஸ்திரேலியா சிட்னி மாநகரில் கடந்த வெள்ளிக்கிழமை (29) இரவு கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

உலகில் முதல் தடவையாக இலங்கைக்கு வெளியே நிறுவப்படும் முதலாவது சிலை இதுவாகும். இலங்கைக்கு வெளியில் முதல்முறையாக இடம்பெற்ற இவ்வாறானதொரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வில் உலகின் பன்னாட்டு அறிஞர்கள் பலரும் பங்கேற்றனர்.

சிட்னி துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் சிட்னி உதயசூரியன் மாணவர் உதவி மையத்தின் ஸ்தாபகரும், ஆஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றியத்தின் போஷகரும், சமூக செயற்பாட்டாளருமான நாகமணி குணரெட்ணத்தின் முழு முயற்சியில் சுவாமி விபுலானந்த அடிகளார் திருவுருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது.

இதனை சுபநேரத்தில் சிலை நிறுவுனர் திரு திருமதி குணரெத்தினம் மனோன்மணி தம்பதியினர் மங்கல பேரிகைகள் முழங்க, திரைநீக்கம் செய்து மாலை சூட்டி நெற்றித் திலகமிட்டு திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வின் சிறப்பு அதிதிதிகளாக அண்ணாமலை பல்கலைக்கழக – கனடா வளாகத்தின் தலைவர் காரைதீவைச் சேர்ந்த பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி, மலேசியா தமிழ் பல்கலைக்கழக பேராசிரியர் மன்னர் மன்னன், இந்திய முனைவர் மு. இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்வில் "சிட்னியில் அடிகளார் படிவமலர்" என்ற சிறப்பு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.முதற் பிரதியை சிலைநிறுவுனரும் நூலாசிரியருமான நாகமணி குண ரெட்ணம், பேராசிரியர் பாலசுந்தரத்துக்கு வழங்கி வைத்தார்.











# பாலமுனையில் உலருணவு வழங்கல்





(எம்.ஏ.ஏ.அக்தார்)

பாலமுனை பிரைட் யூத் அமைப்பால் உலர் உணவுப் பொதிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் உலர் உணவுப் பொதிகள் பாலமுனை அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரைட் யூத் அமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



# மட்டக்களப்பு மாவட்டத்துக்கு புதிய சமுர்த்திப் பணிப்பாளர்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய சமுர்த்திப் பணிப்பாளராக சுந்தரமூர்த்தி ராஜ்பாபு நியமிக்கப்பட்டுள்ள நிலையில் இன்று திங்கட்கிழமை (01) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கடமைகளைப் பொறுப் பெற்றுக் கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் தன் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டதுடன், தன் அலுவக பணியையும் சமுர்த்தி பிரிவில் தொடங்கியுள்ளார்.

கொம்மாதுறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், கோரளைப்பற்று தெற்கு (கிரான்) பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராக கடமையாற்றினார். இந்த நிலையில் தற்போது மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.





# சிறுவர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணம்

(எம்.எம்.றம்ஸீன்)

சிறுவர் கழகங்களை மேம்படுத்தும் நோக்கில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தால் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.எம். கஸ்பியா வீவி சிறுவர் பாதுகாப்பு உத்தி யோகத்தர் எஸ்.எச்.சியாத், ஏ.எல்.எம். றணீஸ் ஆகியோர்களின் பங்குபற்றலுடன் பாலமுனை மின்ஹாஜ் தேசிய பாடசாலைக்கு கரம் போட் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர் மற்றும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.



# நுவரெலியாவில் வசந்தகால நிகழ்வு விக்டோரியா அருகில் இன்று ஆரம்பம்

(ஆ.ரமேஸ்)

அழகிய நுவரெலியாவில் 2024 ஆம் ஆண்டுக்கான ஏப்ரல் வசந்தகால நிகழ்வின் உத்தியோக பூர்வமான ஆரம்ப விழா நுவரெலியா விக்டோரியா பூங்காவுக்கு அருகில் வெகு கோலாகலமாக இன்று (01) காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நுவரெலியா மாநகர சபை ஆணையாளரும் நுவரெலியா மாவட்ட செயலக மேலதிக செயலாளருமான திருமதி எஸ்.பி.கே.போதிமானவின் அழைப்பின் பேரில் மத்திய மாகாண ஆளுனர் லலீத் யூ கமகே தலைமையில் இந்த விழா இடம்பெற்றது.

இதில் மத்திய மாகாண செயலாளர் அஜீத் பிரேமஸ்ரீ, நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட, மாகாணத்துக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் லயனல் குணத்திலக்க, உட்பட முன்னால் நகர முதல்வர்களான சந்தனலால் கருணாரத்ன, மற்றும் மஹிந்த தொடாம்பகமகே ஆகியோருடன் முன்னால் நுவரெலிய மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.



இந்த ஆரம்ப நிகழ்வில் கலாச்சார நடனங்கள், பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்தியங்கள், நடனங்கள், வாகன பேரணிகள் உள்பட பல நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நுவரெலியா ஏப்பிரல் வசந்த கால நிகழ்வானது இன்றுமுதல் தொடர்ச்சியாக பல்வேறு அம்சங்களை கொண்டு ஒரு மாத காலத்துக்கு இடம்பெறவுள்ளது.

இன்றைய ஆரம்ப நிகழ்வில் பார்வையாளர்களாக வெளி நாட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் உள்நாட்டவர்கள் என பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டனர்.

# கல்வியால் எமது இலக்குகளை நிச்சயம் அடைந்து விட முடியும்

## அங்கஜன் இராமநாதன் எம்.பி. தெரிவிப்பு



(த.சுபேசன்)

யுத்தத்தால் அடைய முடியாத எமது இலக்குகளை நிச்சயம் கல்வியால் அடைய முடியும்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை தென்மராட்சியில் இடம்பெற்ற என் கனவு யாழ். இலவச கற்கை நிலைய திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மக்கள் வாழ உகந்த மாவட்டமாக யாழ். மாவட்டத்தை மாற்ற வேண்டும் என்பதே எனது இலக்கு. என் கனவு யாழ். என்பது வெறுமனே எனது கனவு அல்ல. அது ஒட்டுமொத்த யாழ்ப்பாண மக்களுடையதும் கனவு.

என் கனவு யாழ் செயற்றிட்டத்தின் முக்கிய வேலைத் திட்டமாக மீண்டும் கல்வியில் முதலிடம் என்ற வேலைத் திட்டம் காணப்படுகிறது.

தற்போது எமது பிரதேச இளைஞர் – யுவதிகள் வேலை வாய்ப்புத் தேடி வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்கின்றனர்.

அவ்வாறு சென்ற சிலர் உரிய வேலை வாய்ப்புக் கிடைக்காமல் மீண்டும் நாடு திரும்புகின்றனர்.

எமது பிரதேச இளைஞர்கள் வாய்ப்புக்களைத் தேடி,பொருளாதார முன்னேற்றம் கருதியே பெருமளவில் புலம்பெயர்கின்றனர்.

எமது பிரதேசத்தை முன்னேற்றா விட்டால், வாய்ப்புக்களை நாட்டினுள்ளேயே உருவாக்காவிட்டால் இளைஞர்களுடைய வெளியேற்றத்தைத் தடுக்க இயலாது.

இவ்வாறான நிலையில் எதிர்காலத்தில் எமது இலக்கை அடையும் போது, எமது உரிமைகளை முழுமையாகப் பெறும் போது எவ்வாறு நாம் எமது பிரதேசத்தை கட்டியெழுப்ப முடியும்?

இளைஞர்கள் இன்றி எதுவுமே சாத்தியமில்லை. இளைஞர்கள் இன்றி ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியாது.

எனவே எதிர்கால சமுதாயத்தின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த அவர்களுக்கான பொருளாதார முன்னேற்றத்தை அவர்களுடைய பிரதேசத்திலேயே பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இலங்கையின் மூளை என்று யாழ்ப்பாணம் வர்ணிக்கப்படுகிறது. அந்த மூளைக்கு இன்று என்ன நடந்தது? வடக்கு மாகாணம் கல்வியில் வீழ்ச்சியடைந்து செல்வதாகத் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன . மறுபடியும் கல்வியில் முதலிடத்தைப் பெற்றால்தான் அனைத்து முன்னேற்றத்தையும் பெற முடியும்.

நாம் யுத்தம் செய்து பார்த்து விட்டோம், போராட்டங்கள் செய்து பார்த்து விட்டோம் இருப்பினும் எமது இலக்கை அடைய முடியவில்லை.

எமது இலக்கை அடைந்து சமவுரிமையைப் பெறவேண்டுமானால் பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும்.

அதற்கு எமக்கு இங்கு பாரிய வளங்கள் இல்லை. இருக்கும் ஒரே சிறந்த வளம் கல்வி. ஆனால் அந்தக் கல்வியைக் காலத் தேவைக்கு ஏற்ப சற்று வித்தியாசமாகப் புகட்ட வேண்டும். இன்று பலரும் கல்வியை முடித்து விட்டு வேலைவாய்ப்பு இன்றி இருக்கின்றனர்.

ஏனெனில் படித்த படிப்புக்கும் வேலைச் சந்தைக்கு தேவைப்படும் திறமைக்கும் பொருத்தமில்லாத நிலை உள்ளது. எமது இளம் தலைமுறைக்கு வேலைச் சந்தைக்குத் தேவையான கல்வியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.அதனூடாகவே அவர்களுக்குச் சிறந்த எதிர்காலத்தைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

யாழ். மாவட்ட மக்கள் வெளிநாட்டு உதவிகளைப் பெற்று வசதியான வாழ்க்கை வாழ்கின்றனர் என்ற கருத்து நிலவுகின்றது. ஆனால் இன்றும் சில கிராமங்களில் இருக்க வீடு இன்றி, வாழ்வாதாரம் இன்றி பல குடும்பங்கள் தவிக்கின்றன. கணணியை தொட்டுப் பார்க்காத ஏராளம் மாணவர்கள் உள்ளனர்.

இவ்வாறு வாய்ப்புக்கள் கிடைக்காதவர்களுக்காக உருவாக்கப் பட்டதே என் கனவு யாழ் அக்கடமி.

வறிய மாணவர்கள் போக்குவரத்துச் செலவைக் கூட தாங்க முடியாதவர்கள். எனவே தான் என் கனவு யாழ் அக்கடமி ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் அமைக்கப்பட்டு வருகின்றது.– என்றார்.



# கல்முனையில் 8 ஆவது நாளாக இன்றும் போராட்டம்!

**( வி.ரி.சகாதேவராஜா)**

தமக்கு இழைக்கப்படும் அநீதிக்கு நீதி கோரி கல்முனையில் இன்று (01) திங்கட்கிழமை எட்டாவது நாளாக பொது மக்கள் போராட்டம் தொடர்கிறது.

பெரும் எண்ணிக்கையில் பொது மக்கள் கொழுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது அமைதிப் போராட்டத் தில் ஈடுபட்டு வருகின்றனர்.






# தந்தை செல்வாவின் 126 ஆவது பிறந்த நாள் நிகழ்வு மன்னாரில்

**( வாஸ் கூஞ்ஞ)**

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் 126 ஆவது பிறந்த நாள் நினைவேந்தல் மன்னாரில் இடம்பெற்றது.

ஞாயிற்றுக்கிழமை (31) காலை தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்டக் கிளையின் செயலாளர் யஸ்ரின் துரம் தலைமையில் நடைபெற்றது.

தந்தை செல்வாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு மன்னார் நகரில் மத்திய பகுதியில் அமைந்துள்ள அவ ரின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அவருக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் நானாட்டான் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் , மன்னார் நகர சபை முன்னாள் உப தவிசாளர் மற்றும் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் ஆகி யோரும் கலந்து கொண்டனர்.





# பால்டிமோர் பாலத்தின் இடிபாடுகளை அகற்றும் பணிகள் ஆரம்பமாகின

அமெரிக்காவின் மேரிலாண்ட் பகுதியில் அமைந்துள்ள பால்டிமோர் பிரான்ஸிஸ் ஸ்கொட் கீ பாலத்தின் இடிபாடுகளை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிங்கப்பூர் கொடியுடன் 27 நாள்கள் கடல் பயணமாக கொழும்பு நோக்கி புறப்பட்ட கப்பல், துறைமுகத்தை விட்டு கிளம்பிய 20 முதல் 30 நொடிகளிலேயே அதன் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியிருந்தது.

பாலத்தின் இடிபாடுகளின் இரும்பு பகுதிகளை அகற்றுவதற்காக பெரும் எண்ணிக்கையிலான கிரேன்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

விபத்தில் சிக்கி காணாமல் போனவர்களின் சடலங்களை தேடிக் கண்டு பிடிப்பதற்கு முன்னதாக இந்த இடிபாடுகள் அகற்றப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



அத்துடன், ஆயிரம் தொன் எடையை தூக்கக் கூடிய கிரேன்கள் காணப்பட்டாலும், பாலத்தின் எடையானது நான்காயிரம் தொன் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சம்பவ இடத்திற்கு விஜயம் செய்ய உள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பாலத்தை மீளுருக்குவதற்காக அடிப்படை உதவியாக 60 மில்லியன் டொலர்களை ஒதுக்கீடு செய்வதாக பைடன் அண்மையில் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





# ஒரே நேரத்தில் ஏவப்பட்ட 23 செயற்கைக்கோள்கள்

அமெரிக்காவின் ஸ்பேஸ் எக்ஸ் என்ற தனியார் விண்வெளி ஆய்வு நிறுவன 23 ஸ்டார் லிங்க் செயற்கைக் கோள்களை ஏவியுள்ளது.

அத்தோடு, மேற்படி செயற்கைக் கோள்கள் அனைத்தும் வெற்றிகரமாக அதன் சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டன.

மேலும், இதற்காக புளோரிடாவின் கேப் கனாவெரல் விண்வெளி ஏவு தளத்தில் இருந்து பால்கன்-9 வகை ரொக்கெட் ஏவப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, இந்த செயற்கைக் கோள்கள் அனைத்தும் நம்பமுடியாத அளவுக்கு அதிவேக பிராட்பேண்ட் இணையத்தை வழங்கும் என ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## ரிஷி சுனக்கின் கன்சர்வேட்டிவ் கட்சி பெரும் தோல்வியினைச் சந்திக்கும்

### கருத்துக் கணிப்பில் தகவல்



பிரித்தானிய நாடாளுமன்ற தேர்தலில் பிரதமர் ரிசி சுனக்கின் கன்சர்வேட்டிவ் கட்சி பெரும் தோல்வியைச் சந்திக்கும் என கருத்து கணிப்பொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

தேர்தலில் யாருக்கு என்பது தொடர்பில் சிவில் சமூக பிரச்சார அமைப்பான "பெஸ்ட் ஃபார் பிரிட்டன்" மெகா கருத்துக் கணிப்பொன்றை நடத்தியதன் மூலமாகவே இது தெரியவந்துள்ளது.

அதன்படி, தேர்தல் நடத்தப்பட்டால், ரிஷி சுனக்கின் கன்சர்வேட்டிவ் கட்சி நாடு முழுவதும் 250 எம்.பி.க்களை இழக்கும் என்றும், தொழிலாளர் கட்சி 468 இடங்களை பெற்று வெற்றி பெறும் என்றும் கூறப்படுகிறது.

அத்தோடு, பொதுத்தேர்தலில் பிரதமரின் கட்சிக்கு பெரும் பின்னடைவு ஏற்படுமெனவும் கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், கருத்துக் கணிப்பில், கன்சர்வேடிவ் கட்சியைவிட 19 புள்ளிகள் முன்னிலையுடன், எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி 45 சதவீத வாக்குகளை பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், கன்சர்வேட்டிவ் கட்சியில் பிரதமர் ரிஷி சுனக்கின் ரிச்மண்ட் மற்றும் நார்தாலர்டன் தொகுதியில் அவர் வெற்றி பெறுவது கேள்விக்குறியாக உள்ளதாகவும் தொழிலாளர் கட்சி அவரை விடவும் 2.4 சதவீதம் மட்டுமே பின் தங்கிய நிலையில் காணப்படுவதாக தெரியவந்துள்ளது.

## அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு: இண்டியானாபோலிஸில் பதற்றம்



அமெரிக்காவின் இண்டியானாபோலிஸ் நகரில் திடீரென நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் 7 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இந்த சம்பவமானது, மக்கள் நடமாட்டமுள்ள வணிக வளாகமொன்று வெளியே நடத்தப்பட்டுள்ளது.

இரு தரப்பினரிடையே இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என கூறப்படுகிறது.

அத்தோடு, தாக்குதலில் 7 இளைஞர்கள் காயமடைந்துள்ளனர் என்றும் பெருநகர பொலிஸ் துணை தலைவர் தான்யா டெர்ரி தெரிவித்துள்ளார்.

# செயல்வீரர் செந்தில் பாலாஜியை சிறையில் அடைத்தது பா.ஜ.க. சதி

## ஈரோடு பிரச்சாரத்தில் முதல்வர் ஸ்டாலின் ஆவேசம்

"பிரதமர் மோடி, தேர்தல் நெருங்க நெருங்க, தோல்வி பயத்தில் செய்யக் கூடாததை எல்லாம் செய்கிறார். ஜார்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரி வாலை கைது செய்திருக்கிறார்கள். இங்கு தமிழகத்திலும் மேற்கு மண்ட லத்தின் வலிமையான செயல்வீரர் செந்தில் பாலாஜியையும் இதே மாதிரிதான் சிறையில் அடைத்து வைத் திருக்கிறார்கள். பிணை கூட கொடுக் காமல் பல மாதங்களாக அவரை சிறையில் வைத்திருக்கிறார்கள்"

– இவ்வாறு ஈரோட்டில் நடந்த பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித் துள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், நேற்று ஈரோடு மாவட்டம், மொடக் குறிச்சியை அடுத்த சின்னியம்பாளை யத்தில் நடைபெற்ற இண்டியா கூட்டணி யின் மக்களவைத் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் நாமக்கல் தொகுதி வேட்பாளர் மாதேஸ்வரன், ஈரோடு தொகுதி வேட்பாளர் பிரகாஷ் , கரூர் தொகுதி வேட்பாளர் ஜோதிமணி ஆகி யோரை அறிமுகப்படுத்தி, இண்டியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக் களிக்குமாறு பிரச்சாரப் பொதுக்கூட் டத்தில் உரையாற்றினார்.

இதன்போது அவர் மேலும் தெரி



விக்கையில்,

"கடந்த 2021ஆம் ஆண்டு அ.தி. மு.க. எனும் இருண்டகால ஆட்சியைச் சட்டம் ஒழுங்கைச் சீர்குலைத்த ஆட் சியை, தொழில் வளர்ச்சியைப் பாழ்படுத் திய ஆட்சியை, தமிழகத்தின் முன் னேற்றத்தைப் பின்னுக்குத் தள்ளிய ஆட்சியை அகற்றி, என் மேல் நம் பிக்கை வைத்து, என்னிடம் கொடுத் தீர்கள். ஆட்சிப் பொறுப்பேற்ற நம் முடைய திராவிட மாதிரி கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி, இந் தியாவில் இருக்கும் மாநிலங்களுக் கெல்லாம் முன்னோடியாக இருக்கிறது. வாக்களித்தவர்கள், வாக்களிக்காத வர்கள், என்ற பாரபட்சம் பார்க்காமல் அனைவருக்கும், பொதுவான அரசாக ஆட்சி நடத்தி வருகிறோம்.

தமிழகத்தில் தொழில்வளர்ச்சியைப் பெருக்கவேண்டும். இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்று முழு முயற்சியோடு செயல்பட்டு வருகிறது திராவிட மாதிரி அரசு. ஒவ் வொரு மாவட்டத்திலும் தொழிற்சாலை கள் அமைய வேண்டும். வளர்ச்சி என்பது சீரானதாக அனைத்து மாவட் டங்களுக்கும் இருக்க வேண்டும் என்பதுதான் தி.மு.க. அரசின் நோக்கம். நமக்கு மிகப்பெரிய இலக்கு இருக்கி றது.

ஜார்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரனை கைது செய்தார்கள். டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலை கைது செய்திருக்கிறார்கள். இவர்கள் எல் லாம் வெளியிலிருந்து வலிமையாகத் தேர்தல் பணியாற்றுவார்கள் என்று பயந்து நடுங்கிக் கைது செய்திருக் கிறார்கள். இங்கு தமிழகத்திலும் மேற்கு மண்டலத்தின் வலிமையான செயல்வீரர் செந்தில் பாலாஜியையும் இதே மாதிரிதான் சிறையில் அடைத்து வைத்திருக்கிறார்கள். பிணைகூட கொடுக்காமல் பல மாதங்களாக அவரை சிறையில் வைத்திருக்கிறார்கள். மேற்கு மண்டலத்தில் அவரின் பணி களை முடக்க வேண்டும் என்று இந்த சதிச் செயலைச் செய்தார்கள். பா.ஜ. கவின் அத்தனை சதிச்செயல்களையும் கடந்து, செந்தில் பாலாஜியால் உருவாக் கப்பட்ட செயல்வீரர்கள் களத்தில் வேகமாக பணியாற்றிக் கொண்டிருக் கிறார்கள்." – என்றார்.

# தேர்தலுக்காக கச்சதீவு தொடர்பில் பிரதமர் நரேந்திர மோடி பேசுகிறார்

## மதுரை பிரச்சாரத்தில் சீமான் கருத்து

தேர்தலுக்காக கச்சதீவு பிரச்சி னையை பற்றி பிரதமர் மோடி பேசு கிறார் என நாம் தமிழர் கட்சி ஒருங்கி ணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

மதுரை கோ. புதூரில் நேற்று இரவு நாம் தமிழர் கட்சியின் மதுரை வேட் பாளர் சத்யாதேவியை ஆதரித்து தேர் தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் அவர் பங்கேற்றார்.

இதன்போது அவர் உரையாற்று கையில்,

"நாம் தமிழர் கட்சி பதவிக்கானது அல்ல மக்களின் உதவிக்கானது. கட்சியை வைத்து பிழைக்க வந்தவர்கள் அல்ல, மக்களுக்காக உழைக்க வந்த வர்கள். ஒரேயாருமுறை எங்களை நம்பி வாக்களியுங்கள். வளர்ச்சியை தருகிறோம். எங்களின் வலிமையை உணர்த்தியவர்கள் நீங்கள். அஞ்சு வதும், அடிபணிவதும் தமிழர்களுக்கு கிடையாது.

மதம் சொல்லி, ஜாதி சொல்லி வந்த வர்கள் அல்ல நாங்கள். 6 தேர்தலில் விவசாயி சின்னத்தில் போட்டியிட்டு 7 விழுக்காடு வாக்குகள் பெற்றோம். அதில் தி.மு.க. திட்டமிட்டு கிறிஸ்த வர்கள், இஸ்லாமியர்களுக்கு எதிரான வர்கள் என எங்களை பிரச்சாரம் செய்ததால் 3 சதவீத வாக்குகள் இழந் தோம். தி.மு.கவின் 60 ஆண்டுகள் பொய்யை நம்பியவர்கள் அதையும் நம்பினார்கள். இந்த தேர்தலில் 10 சதவீத வாக்குகள் பெற்றுவிடுவார்கள் என்ற அச்சத்தில் சின்னத்தை பறித் துள்ளனர்.

டி.டி.வி தினகரன், ஜி.கே.வாசனுக்கு கேட்ட சின்னம் கிடைக்கிறது. எங்க ளுக்கு மறுக்கப்படுகிறது. தேர்தல் ஆணையம் தன்னாட்சி அதிகாரம் பெற்றது என நம்பி ஏமாந்து போனோம். சின்னம் போனால் என்ன இந்த தேர் தலில் சீமானுக்கும், அவரது எண்ணத் திற்கும்தான் வாக்கு என மக்கள் நிரூ பிப்பார்கள்.

1976 இல் கொடுக்கப்பட்ட கச்சதீவு பிரச்சினையை தேர்தலுக்காக மோடி யும், அண்ணாமலையும் தற்போது பேசி வருகின்றனர். அண்ணாமலை எடுத்துக் கொடுத்த ஆர்.டி.ஐ. தகவலை தற்போது தேர்தலுக்காக பேசுகின்றனர். கச்சதீவை மீட்க முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் வழக்கு தொடர்ந்தனர். அப்போது மத்திய பா.ஜ.க. அரசு சார்பில் கச்சதீவு கொடுத்தது கொடுத்ததுதான். அதை திரும்பவும் மீட்க முடியாது என்றனர். தற்போது தேர்தலுக்காக கச்சதீவு பிரச்சினையை பேசுகிறார்கள்.

அதே அண்ணாமலையை குஜராத் கலவரம், மணிப்பூர் கலவரம் பற்றி



ஆர்டிஐ எடுத்து தரச் சொல்லுங்கள். முதலில் பா.ஜ.கவின் 'பி டீம்' என்றனர். தற்போது பா.ஜ.க. நாம் தமிழர் கட் சியின் 'பி' டீமாக உள்ளது. நான் பேசி வரும் கச்சதீவு பிரச்சினையை இப் போது அண்ணாமலை மூலமாக மோடி பேசுகிறார். தமிழர் உரிமை மீட்போம், தமிழகத்தை காப்போம் என முன்னாள் முதல்வர் பழனிசாமி பேசுகிறார். தமி ழர் உரிமையை காப்போம் என கனி மொழி ஆகியோரும் பேசி வருகின்ற னர். இப்படி எனது கொள்கையை பேச அனைத்துக் கட்சியிலும் ஆள் வைத் துள்ளேன்.

பா.ஜ.க, காங்கிரஸ் கட்சிகளுக்கு கொள்கை கிடையாது. அதேபோல் தமிழகத்தில் அ.தி.மு.க, தி.மு.கவை நம்பாதீர்கள். 13 தலைமுறைக்கு ஒரு முறை மரபணு மாறிவிடும் என்கின்ற னர். அதனால் தற்போதைய இளை ஞர்களுக்கு தமிழர்களின் வரலாற்றை சொல்லி வருகிறோம். நாடாளுமன்றத் தேர்தலில் ஆகப்பெரும் ஆளுமை களை வேட்பாளராக நிறுத்தியுள்ளோம். நேர்மைக்கு, எளிமைக்கு, தூய்மைக்கு, மாற்றத் துடிக்கும் தலைமைக்கு வாக்க ளியுங்கள்." – என்றார்.

# தமிழகத்தில் தேர்தல்களில் பா.ஜ.கவை அடையாளம் காட்டியது அ.தி.மு.க.தான்

## எடப்பாடி பழனிசாமி கருத்து



“தமிழகத்தில் 1998 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவை அடையாளம் காட்டியவர் மறைந்த முதல்வர் ஜெயலலிதா. எங்களைப் பார்த்தா கட்சி இருக்காது என்று கூறுகிறீர்கள்”

– இவ்வாறு மதுரை பா.ஜ.க. வேட்பாளர் ராம சீனிவாசனுக்கு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பதிலடி கொடுத்துள்ளார்.

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில், சிதம்பரம் மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர் சந்திரகாசனை ஆதரித்து, அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“தமிழக முதல்வர் ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி, தந்தை மகன் இருவரும் தி.மு.க. கொம்பெனியின் முதலாளிகள். தி.மு.க. கட்சி அல்ல, அது ஒரு கொம்பெனி. ஆனால், அ.தி.மு.கதான், மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆரால், மக்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட கட்சி.

தமிழகத்தில் அ.தி.மு.க. 30 ஆண்டு காலம் ஆட்சி செய்துள்ளது. இன்று இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்க காரணம், அ.தி.மு.க. இந்தியாவிலும், தமிழகத்திலும் எத்தனையோ கட்சிகள் உள்ளன. ஆனால், சந்திரகாசன் போன்ற சாதாரண தொண்டனுக்கு வாய்ப்பு கொடுப்பார்களா? அ.தி.மு.கவில்தான் கிடைக்கும். அதேபோல், ஒரு சாதாரண தொண்டன், அந்த கட்சியின் பொதுச் செயலாளராக வரவேண்டும் என்றால், அது அ.தி.மு.கவில்தான் சாத்தியம்.

இன்றைக்கு மதுரையில் பா.ஜ.க. பொதுச் செயலாளர் பேசியிருக்கிறார். அவர்தான் அந்த தொகுதியின் பா.ஜ.க. வேட்பாளர் ராம சீனிவாசன். அவர் தன்னை அடையாளம் காட்டிக் கொள்வதற்காக, என்னைப் பற்றியும், அ.தி.மு.கவைப் பற்றியும் பேசியிருக்கிறார். 2024, அதாவது இப்போது நடக்கின்ற மக்களவைத் தேர்தலுடன் அ.தி.மு.க. காணாமல் போகும் என்று பேசியிருக்கிறார். காணாமல் போனால், அவர் கண்டுபிடித்துக் கொடுக்கட்டும். உங்களைப் போல எத்தனைப் பேரை பார்த்த கட்சி அ.தி.மு.க. அ.தி.மு.கவின் வரலாறு அவருக்குத் தெரியுமா?

நான் உட்பட இந்த மேடையில் உள்ள பலரும் 50 ஆண்டுகாலம் இந்த கட்சிக்காக உழைத்தவர்கள். உங்களைப் போல சொகுசு வாழ்க்கை நடத்துபவர்கள் அல்ல. இரவு பகல் பாராமல் உழைக்கின்ற உழைப்பாளிகள் நாங்கள். உழைப்பையும், மக்களுக்கு செய்யும் சேவையையும் நம்பி கட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம். உங்களைப் போல வெற்று விளம்பரத்தில் அரசியல் நடத்தவில்லை. 30 ஆண்டுகள் ஆட்சி செய்து, மக்கள் நலத்திட்டங்களைச் செய்து, அதிகமான தொண்டர்களைக் கொண்ட கட்சி அ.தி.மு.க.

எங்களைப் பார்த்து 2024 க்குப் பிறகு, அ.தி.மு.க. இருக்காதா? பொறுத்திருந்து பாருங்கள். உங்களைப் போன்ற வெற்று அரசியல் செய்து கொண்டிருக்கும் நபர்கள் அனைவரும் இந்த தேர்தல் உடன் அடையாளம் காணாமல் போவீர்கள். அதுதான் உண்மை. அதுமட்டுமல்ல, 1998 இல் நான் நாடாளுமன்ற உறுப்பினராக போட்டியிட்டேன். அப்போதுதான், பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்தோம். அப்போதுதான், பா.ஜ.கவின் சின்னம் தாமரை என்று அடையாளம் காட்டியவர் மறைந்த முதல்வர் ஜெயலலிதா. உங்களுடைய அடையாளத்தையே அ.தி.மு.கதான் காட்டியது. எங்களைப் பார்த்தா கட்சி இருக்காது என்று கூறுகிறீர்கள்.” – என்றார்.

# கொள்ளையரிடம் இருந்து மீட்ட கடற்படைக்கு நன்றி

## பாகிஸ்தான் மீனவர்கள் தெரிவிப்பு



கடற்கொள்ளையர்களிடம் இருந்து உயிருடன் மீட்டவுடன், இந்திய கடற்படைக்கு நன்றி தெரிவித்து பாகிஸ்தான் மீனவர்கள் “இந்தியா ஜிந்தாபாத்“ என்று கோஷமிட்டுள்ளனர்.

அரபிக்கடலில் கடந்த சில நாள்களுக்கு முன்பு ஈரானிய மீன்பிடி படகில் 23 பாகிஸ்தானியர்கள் சென்று கொண்டிருந்தனர். அப்போது வழிமறித்த கடற்கொள்ளையர்கள், ஆயுதங்களைக் காட்டி கப்பலை கடத்தினர். தகவலறிந்தவுடன் இந்திய கடற்படை போர்க் கப்பல் ஐ.என்.எஸ். சுமேதா, ஐ.என்.எஸ். திரிசூல் ஆகியவை கடற்கொள்ளையர்களை துரத்த ஆரம்பித்தன.

12 மணி நேர முயற்சிக்கு பிறகு, கடற்கொள்ளையர்கள் கடத்தி சென்ற கப்பலை ஐ.என்.எஸ். சுமேதா கடந்த 29 ஆம் திகதி சுற்றிவளைத்தது. பிறகு, இந்திய கடற்படையிடம் சரணடைந்த 9 கடற்கொள்ளையர்கள் கைது செய்யப்பட்டனர். கப்பலில் இருந்த 23 பாகிஸ்தானியர்களையும் கடற்படையினர் மீட்டனர். ஈரானிய படகும் மீட்கப்பட்டது.

கடற்கொள்ளையர்களிடம் இருந்து பத்திரமாக மீட்கப்பட்டதும், பாகிஸ்தான் மீனவர்கள் “இந்தியா ஜிந்தாபாத்“ என்று கோஷமிட்டு இந்திய கடற்படைக்கு நன்றி தெரிவித்தனர்.

இது மிகவும் நெகிழ்ச்சியாக இருந்தது என்று கடற்படை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

பக்கங்கள் - 4

கனடா முரசு

திங்கட்கிழமை 01/04/2024

## துப்பாக்கிப் பிரயோகத்தால் மலையாள படக்காட்சி ரத்து

ஒன்ராரியோ,ஏப்ரல் 01
டொரன்டோ பெருநகரப் பகுதியில் அமைந்துள்ள நான்கு திரையரங்குகளில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக,

C2



# மொன்ரியலுக்கு மேற்கே ஏற்பட்ட சிறு காட்டுத் தீ கட்டுப்பாட்டுக்குள்

கியூபெக், ஏப்ரல் 01
மொன்ரியலுக்கு மேற்கே மாநில பூங்காவில் ஏற்பட்ட சிறு காட்டுத் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான காட்டுத் தீயிற்கான ஆரம்ப அறிகுறியாக இதனைப் பார்க்கின்றனர்.


அணைக்காது விட்ட சிகரெட் காரணமாக இந்த தீ ஏற்பட்டிருக்கலாம் என கியூபெக் காட்டுத் தீ தடுப்பு சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

2.1ஹெக்டேயர் அளவிலான தீயானது உள்ளூர் தீயணைப்புத் திணைக்களத்தால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுவாக ஏப்ரல் நடுப்பகுதியில் ஆரம்பிக்கும் காட்டுத் தீ, இம்முறை குறைந்தளவு பனிக் காலநிலை காரணமாக விரைவில் ஆரம்பித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# குளிர்கால வாகன டயர்களை மாற்றுவதைத் தாமதியுங்கள்!

## பனிப்பொழிவு இன்னும் இருக்கின்றது





ஒன்ராரியோ, ஏப்ரல் 01
இந்த வாரத்தின் நடுப்பகுதியில் ஒன்ராரியோவின் தென்பகுதியிலும், கியூபெக்கிலும் மழை மற்றும் பனிப்பொழிவு பதிவாகும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கும் இந்த வானிலை மாற்றம், வியாழக்கிழமை வரை நீடிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குளிர்காலத்திற்காக பொருத்தப்பட்ட வாகன டயர்களை மாற்றுவதனை சில நாள்களுக்கு ஒத்தி வைக்குமாறு வானிலை கனடா பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமை வாகனங்களைச் செலுத்துவோர் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.




# வாகனங்களில் டிரக்கிங் சாதனங்களை பொருத்தி அவற்றை மடக்கும் திருடர்கள்

கியூபெக், ஏப்ல் 01

மொன்ரியலில் இருந்து வரும் தமது வாகனங்களில் மறைவாக ஏயார்டெக் மற்றும் ஜி.பி.எஸ். டிரக்கிங் சாதனங்கள் பொருத்தப்பட்டிருப்பதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதத்தில் இது தொடர்பான இரண்டு முறைப்பாடுகள் தமக்கு கிடைக் கப் பெற்றன என பேர்லிங்டன் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனங்களைத் திருடுபவர்களால் இந்த சாதனங்கள் வாகனங்களில் பொருத்தப்படுகின்றன எனச் சுட்டிக் காட்டியுள்ள பொலிஸார், இவ்வாறான சந்தேகத்திற்கிடமான சாதனங்கள் வாகனங்களில் காணக் கிடைத்தால், பொலிஸாருக்குத் தெரிவிக்கும்படியும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கனடா முழுவதும் வாகனத் திருட்டு அதிகரித்து வருகின்ற நிலையில், வாகனத் திருடர்கள் தமக்கு பிடித்த வாகனங்களில் இவ்வாறான சாதனங் களை பொருத்தி, அதன் மூலம் வாக னத்தை கண்டறிந்து திருடுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# கோப்பி விற்பனைக் கிளைகளை நடத்துவோர் வழக்குத் தாக்கல்!

கியூபெக், ஏப்ரல் 01

கனடாவின் பிரபல கோப்பி பரு கும் டிம் ஹார்டன்ஸ் கியூபெக் கிளை களை நடத்துபவர்கள் வர்த்தக நாம உரிமையாளர் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.




தாம் எதிர்பார்த்ததை விட குறை வான இலாபத்திற்காக நிறுவனத் தின் உரிம ஒப்பந்தங்களில் நியாய மற்ற கட்டுப்பாடுகள் விதிப்பதாக வியா ழனன்று கியூபெக் உயர் நீதிமன் றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கில், டிம் ஹார்டன்ஸ் உரிமம் பெற்ற 16 நிறுவனங்கள் வனுடு குழும ஒப்பந்தங்கள் தங்கள் ஒருங்கி ணைந்த 44 உணவகங்களில் 'முழு மையான ஆதிக்க நிலையில் உள் ளன' என்று குற்றம் சாட்டியுள்ளன.

TDL இன் விலை நிர்ணயக் கொள்கை சந்தைக்கு ஏற்றதாக இல்லை என கிளைகளை நடத்துபவர்கள் தெரிவிக்கின்றனர்.

---

**துப்பாக்கி...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டிஷ் கொலம்பியாவின் சர்ரே பகுதி யில் தென்னிந்தியத் மலையாளத் திரைப்படக் காட்சி இரத்து செய்யப்பட்டி ருக்கின்றது.

2017ஆம் ஆண்டு கேரளாவிலிருந்து கனடாவிற்கு குடிபெயர்ந்த ஷாஜன், மோகன்லால் நடித்த மலைக்கோட்டை வாலிபன் திரைப்படத்தை காண ஆவ லாக இருந்த நிலையில், காட்சி ஆரம் பிப்பதற்கு சில மணித்தியாலங்க ளுக்கு முன்னர் திரையரங்கில் இருந்து காட்சி இரத்து செய்யப்பட்டதாக குறுஞ் செய்தி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எதிர்பாராத காரணங்களினால் காட்சி இரத்து செய்யப்படுவதாகவும், டிக்கெட் கட்டணம் மீளவழங்கப்படும் எனவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில நாள்களுக்குப் பின்னரே காட்சி இரத்து செய்யப்பட்டமைக்கான கார ணத்தை ஷாஜன் அறிந்து கொண்டிருக் கின்றார்.

ஷாஜன் மற்றும் சலிம் படின்ஹர் கரா ஆகியோர் தென்னிந்திய திரைப் படங்களை கனடாவில் விநியோகம் செய்பவர்களாகவும் இருக்கின்றனர்.

அண்மைக்காலமாக, தென்னிந்திய திரைப்படக் காட்சிகளை இலக்கு வைத்து இவ்வாறான தாக்குதல்கள் முன்னெடுக் கப்பட்டு வருவதாக ஷஜன் மற்றும் சலிம் ஆகியோர் குற்றம் சுமத்துகின்ற னர்.

# பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து மூன்று பேர் கைதாகினர்



ஒன்ராரியோ,ஏப்ரல்01

மார்ச் 30ஆம் திகதி பிற்பகல் டொராண்டோ நகரத்தில் பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆர்ப்பாட்டம் யங் மற்றும் டன்டாஸ் தெருக்களில் இருந்து டவுன்டவுன் மையத்தின் பிற பகுதிகள் வழியாக நகர்ந்து, இறுதியில் 8:30 மணியளவில் முன் தெருக்களில் நாடாளுமன்றத்திற்கு அருகில் முடிவடைந்தது.

இரவு 8 மணிக்குப் பிறகு சமூக ஊடகங்களில் ஒரு பதிவில், நாடாளுமன்றம் மற்றும் ஜெரார்ட் தெருக்களுக்கு அருகில் ஐந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர் எனப் டொராண்டோ பொலிஸார் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை ஒரு செய்தி வெளியீட்டில், நெடுஞ்சாலைப் போக்குவரத்துச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஆர்ப்பாட்ட ஏற்பாட்டாளர்களை எச்சரித்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். இது அனைத்துப் போராட்டங்களிலும் நடைமுறையில் இருக்கும் என்றும் கூறினார்.

இந்த விதிகளை மீறியமைக்காகவே மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# பஸ்ஸில் ஏறும் சமயம் தாக்குதல் சந்தேகநபரைப் பிடிக்கத் தேடுதல்

ஒன்ராரியோ, ஏப்ரல் 01

இந்த வாரத் தொடக்கத்தில் கிப்லிங் நிலையத்தில் பஸ்ஸில் ஏறும் போது ஒருவர் தாக்கப்பட்டதை அடுத்து, டொரன்டோ பொலிஸார் சந்தேக நபரைத் தேடி வருகின்றனர்.

இந்த சம்பவம் மார்ச் 29 அன்று காலை 9:50 மணியளவில் கிப்லிங் நிலையத்தில் நடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவர் நிலையத்தில் டிடிசி பஸ்ஸில் ஏறிக் கொண்டிருந்த போது, பின்னால் வந்த ஒரு நபர் அவரை முகத்தில் குத்தி, பஸ்ஸின் உள்ளே தரையில் இடித்து, பின்னர் பலமுறை உதைத்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் தனது 30களின் பிற்பகுதியில் இருந்து 40களின் நடுப்பகுதியில் கருப்பு தாடியுடன் இருப்பதாக விவரிக்கப்படுகிறார். அவர் கடைசியாக கோடுகள் கொண்ட கருப்பு டோக், சாம்பல் நிற ஜாக்கெட், கருப்பு பேன்ட், வெளிர் நிற காலணிகள் மற்றும் கருப்பு பேக் பேக் அணிந்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# விபத்தின் சாட்சிகளைத் தேடும் ஒட்டாவா விசாரணைப் பிரிவு!

ஒன்ராரியோ, ஏப்ரல் 01

நேற்று முன்தினம் மார்ச் 30 அன்று மதியம் நடந்த கடுமையான விபத்து சம்பந்தப்பட்ட சாட்சிகளை ஒட்டாவா பொலிஸார் தேடி வருகின்றனர்.

ஒரு மோட்டார் வாகனம் மற்றும் பஸ்ஸுக்கு இடையே ஏற்பட்ட இந்த விபத்தின் காரணமாக ஒருவர் படுகாயமடைந்ததார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மோதலை நேரில் பார்த்தவர்கள் அல்லது விபத்தின் டேஷ்கேம் அல்லது டோர்பெல் காட்சிகளை வைத்திருப்பவர்களை பொலிஸாரைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.




தகவல் தெரிந்தவர்கள் ஒட்டாவா பொலிஸ் சேவை மரண மோதல் விசாரணைப் பிரிவைத் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.



# நுனாவுட் மாநிலம் இன்று வெள்ளி விழா ஆண்டில்!

நுனாவுட், ஏப்ரல் 01

நுனாவுட் மாநிலம் தமது 25வது வருடத்தை இன்றி ஏப்ரல் முதலாம் திகதி கொண்டாடுகின்றது.

1999ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி நுனாவுட் மாநிலம் உருவான போது சிறுவனாக இருந்த பி.ஜே. அகியகொக் இப்போது, அந்த மாநிலத்தின் முதல்வராக இருக்கின்றார்.

கனடாவின் ஆட்சி வரைபடம் மாற்றியமைக்கப்பட்ட அந்த சந்தர்ப்பத்தில் நுனாவுட் பல்வேறு கனவுகளுடனும், எதிர்ப்பார்ப்புகளுடனும் பிறந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

எமது பூமி என்ற பொருள்படக் கூடிய நுனாவுட் என்ற மாநிலம், பல தசாப்த கால பேச்சுவார்த்தைக்கு பின்னர் உருவானது.

1949ஆம் ஆண்டு நியூபவுன்லாந்து மற்றும் லெப்ரடோர் மாநிலத்தின் உருவாக்கத்தின் 50 வருடங்களின் பின்னர் நுனாவுட் பிறந்தது.

# பெண்ணை உதைத்துத் தாக்கியவரை வலை வீசித் தேடி வரும் பொலிஸார்



ஒன்ராரியோ, ஏப்ரல் 01

மார்ச் 30ஆம் திகதியன்று டொன் மில்ஸ் ஸ்டேஷன் அருகே ஒரு பெண்ணை உதைத்து, ஒரு பொருளால் தலையில் பலமுறை அடித்தவர் எனக் கூறப்படும் சந்தேக நபரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

டொன் மில்ஸ் ரோடு மற்றும் ஷெப்பர்ட் அவென்யூ ஈஸ்ட் பகுதியில் மதியம் 12:30 மணிக்கு முன் இந்தச் சம்பவம் தொடர்பில் தமக்குத் தகவல் கிடைத்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி, பாதிக்கப்பட்ட பெண் தனது குழந்தைகளுடன் டொன் மில்ஸ் நிலையத்தில் இருந்து நடந்துகொண்டிருந்தபோது, ஒரு ஆண் தனது குழந்தைகளை நோக்கி ஒரு கருத்தை தெரிவித்ததால், அந்தப் பெண் பதிலளித்தமையால் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்தேக நபர் தப்பிச் செல்வதற்கு முன் பெண்மணிக்கு கொலை மிரட்டல் விடுத்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் அந்த பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.